# MODUL SOALAN TOPIKAL CEMERLANG AMANJAYA SPM 2018

BAHASA TAMIL

**தமிழ் மொழி எஸ்.பி.எம்.**

6354

# SET 2

**விடிவெள்ளி 2**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

## பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை

[ *பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்* ]

நீர் உமது பள்ளியின் தமிழ்மொழிக் கழகச் செயலாளராக இருக்கிறீர். கடந்த வாரம் **தமிழ்மொழிக் கழகத்தின் இரண்டாவது செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் பேசப்பட்ட தகவலை ஒட்டி ஒரு கூட்டக் குறிப்பறிக்கையைத்** தயார் செய்க.

கீழே கொடுக்கப்பட்டுள்ள **குறிப்புகளை விவரித்து** உமது **கூட்டக் குறிப்பறிக்கையைத்** தயார் செய்க.

- கூட்டத்தில் கலந்து கொண்டோர் விவரம்
- உரை – வரவேற்புரை – தலைமையுரை – ஆலோசகர் உரை
- கடந்த கூட்டக்குறிப்பை ஆய்ந்து ஏற்றல்
  - முன்மொழிதல், வழிமொழிதல்
- கூட்டத்தில் பேசப்பட்ட விவரங்கள்
  - கல்விச் சுற்றுலா
  - பண்பாட்டு விழா
  - தன்முனைப்புக் கருத்தரங்கு
- பொது

**கூட்டக் குறிப்பறிக்கையைத் தயாரிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டியவை:**

- கூட்டக்குறிப்பறிக்கை வடிவில் இருக்க வேண்டும்.
- பள்ளிப் பெயர், தலைப்பு எழுதியிருத்தல் வேண்டும்.
- கூட்டம் நடைபெற்ற நாள், நேரம், இடம்
- கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்/ கலந்து கொள்ளாதவர்கள்
- நிகழ்வுகளைத் துணைத் தலைப்பில் எண்ணிட்டு எழுதியிருக்க வேண்டும்.
- அறிக்கை தயாரித்தவர் எனும் குறிப்பு முடிவில் இருத்தல் வேண்டும்.
- தேதி- வலப்புறத்தில் எழுதியிருக்க வேண்டும்.
- கையொப்பம், முழுப்பெயர், இருத்தல் வேண்டும்.

[30 புள்ளி]

**விடிவெள்ளி 2**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம்]

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

1 **நம் நாட்டில் சாலை விபத்து ஏற்படுவதற்கு வாகனமோட்டிகளின் கவனக் குறைவே காரணம்**
இத்தலைப்பில் **வாதக்** கட்டுரை எழுதுக.

[ 70 புள்ளி ]

**விடிவெள்ளி 2**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

கேள்வி 7 முதல் 10 வரை
**கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக .**

1 இவ்வுலகில் தற்பொழுது பல்லாயிரம் மொழிகள் பேசப்பட்டு வருவது, நாம் அனைவரும் அறிந்த ஒன்றே. மொழி என்பது ஒரு தொடர்புக் கருவி. அது மக்களைச் சிந்திக்கவும் தங்கள் கருத்துகளை மற்றவர்க்கு உணர்த்தவும் உதவுகிறது. மேலும் மக்களின் நாகரிக வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் அடிப்படையாக விளங்குவதும் மொழியே ஆகும். தாய், தன் குழந்தைக்கு முதன்முதலில் சொல்லித் தரும் மொழியே தாய்மொழியாகும். குழந்தையைக் கொஞ்சுவதற்கும் பழக்கவழக்கங்களைக் கற்றுத் தருவதற்கும் இம்மொழி பெரிதும் உதவுகிறது.

2 தாய்மொழியில் ஆர்வத்தைச் செலுத்தினால் அது நிச்சயம் கடினமாக இருக்காது. தாய்மொழி மிகவும் கடினமாக உள்ளது என்பது ஒருசிலரின் கூற்றாகும். இவ்வாறு கூறுபவர்கள் முதன்முதலில் அம்மொழியை வளர்க்க அவர்கள் என்ன செய்துள்ளனர் என்பதை ஆராயத் தவறிவிடுகின்றனர். “ரோமாபுரி ஒரு நாளில் கட்டப்பட்ட ஒன்றல்ல.” அதுபோல எந்த ஒரு மொழியின் அறிவையும் ஒரு நாளிலேயே பெருக்கிவிட இயலாது. படிப்படியாக விடாமுயற்சியுடனும் ஆர்வத்துடனும் பாடுபட்டால் வெற்றி நிச்சயம்! மொழி அறிவு இருந்தமையால் வணிகன் ஒருவன் உயிர் தப்பிய கதையை நாம் அறிந்திருப்போம்.

3 சாதுவன் என்னும் வணிகன் நாகர்களிடம் சிக்கிக் கொண்டான். மனிதர்களைக் கொன்று தின்னும் கொடியவர்களாகிய நாகர்களுடன் சாதுவன் அவர்களுடைய தாய்மொழியில் பேசினான். அது கேட்டு வியப்படைந்த நாகர்கள், அந்த மொழியைப் பேசியதன் காரணமாக அவனைக் கொல்லாமல் பொன்னும் பொருளும் கொடுத்து அனுப்பி வைத்தனர். மணிமேகலை என்னும் காப்பியத்திலுள்ள இச்செய்தியிலிருந்து கொலைக்குணம் உள்ளவர்களையும் நல்வழிப்படுத்தும் ஆற்றல் தாய்மொழிக்கு உண்டு என்பதை அறிய முடிகிறது.

4 உலகில் தோன்றி வளர்ந்த மொழிகள் பலவாயினும் நிலைத்து வாழும் **பேறு பெற்றவை** சிலதாம்! உலகில் உள்ள மிகத் தொன்மையான மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. அத்தகைய மொழியை வளர்க்க நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்பதில் சற்றும் ஐயமில்லை. தேர்வுக்காக மட்டுமல்லாமல் நம் தாய்மொழி தமிழ் என்ற உணர்வோடு அதைக் கற்க வேண்டும். எடுத்த எடுப்பிலே தமிழ் மிகவும் கடினமாக இருக்கிறது எனக் குறைபடாமல் அதைத் தொடக்கத்திலிருந்து புழக்கத்தில் கொண்டுவர

வேண்டும். பிள்ளைகளுக்குத் தாய்மொழி ஆர்வத்தை வளர்ப்பது பெற்றோரின் கைகளில்தான் உள்ளது. தமிழ்மொழியில் மாணவர்களும் ஆர்வம் காட்டி ஆனவற்றைச் செய்ய முன்வர வேண்டும்.

மொழி என்பது சமுதாயம் முழுமைக்கும் பயன்படுகிற ஓர் ஒப்பற்ற கருவியாகும். மொழியில் ஏற்படுகிற முன்னேற்றமும் வளர்ச்சியும் சமுதாய வளர்ச்சிக்கு உதவும் என்பதை மனத்தில் கொண்டு செயல்பட்டால் நம் பங்கு என்னவென்பது புலப்பட்டுவிடும்.

-தமிழ் இணையம்-

7. மொழி மக்களுக்கு எவ்வாறு உதவுகிறது? [2 புள்ளி]

8. i) 2 ஆவது பத்தியில் ஆசிரியர் வலியுறுத்தும் கருத்து யாது? [2 புள்ளி]

   ii) தாய்மொழியின் ஆற்றலைக் குறித்து மணிமேகலை கூறும் தகவல் யாது? [2 புள்ளி]

9. கருமையாக்கப்பட்டுள்ள சொற்றொடருக்கு ஏற்ற பொருள் எழுதுக.
   உலகில் தோன்றி வளர்ந்த மொழிகள் பலவாயினும் நிலைத்து வாழும் **பேறு பெற்றவை** சிலதாம்! [2 புள்ளி]

10. தாய்மொழிப் புறக்கணிப்பால் ஏற்படக்கூடிய **ஐந்து தீமைகளை** விளக்கி 50 சொற்களில் எழுதுக.

[10 புள்ளி]

**விடிவெள்ளி 2**

**தனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

SKEMA JAWAPAN - விடைப்பட்டி (கேள்வி 7-10)

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 7 | சிந்திக்கவும் கருத்துகளைப் பிறருக்கு உணர்த்தவும் துணைப்புரிகிறது. | 2 |
| 8 | i) ஒருவருக்குத் தொடர்ச்சியான விடாமுயற்சியும் ஈடுபாடும் இருந்தால் தாய்மொழியை எளிமையாகக் கற்றுக்கொள்ளலாம்.<br>ii) கொலைக்/வன்மமான குணங்களுடையவரையும் நல்வழிப்படுத்தும் சக்தி தாய்மொழிக்கு உள்ளது எனும் தகவலை மணிமேகலை காப்பியம் காட்டுகிறது. | 2<br>2 |
| 9 | தகுதி வாய்ந்தவை/ சிறப்பு வாய்ந்தவை | |
| 10 | 1. நாளுக்கு நாள் தாய் மொழியின் முக்கியத்துவம் குறைந்து, பிறகு தாய்மொழி மொழி முற்றாக அழிந்து விடும்.<br>2. மொழி ஓர் இனத்தின் அடையாளம் என்பதால் மொழி அழிந்தால் அவ்வினம் தனது அடையாளத்தை இழக்க நேரிடும்.<br>3. தாய்மொழி அடிப்படையில் செயல்படும் பள்ளிகள் மூடப்படும்.<br>4. தாய்மொழிகளில் வெளியிடும் இலக்கியப்படைப்புகளை வாசித்து உய்த்துணர இயலாது.<br>5. தாய்மொழி தொடர்பான தொழில்கள் பாதிப்படையும்.<br>6. தாய்மொழியில் இலக்கியப்படைப்புகள் குறைந்துவிடும்.<br>7. படைப்பாளர்கள் தாய்மொழியில் எழுதுவதற்குத் தயங்குவர்.<br>[ஏற்புடைய பிற விடைகள்] | 5x2=<br>10 |